நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



புதுவயலில் பிறப்புற்றார் புகைப்படத்தால் சிறப்புற்றார்
புதுக்கோட்டை சுழற்குழுவில் புகழ்தலைமைப் பொறுப்பேற்றார்
மதியுடைய வீட்டரசி வள்ளியம்மை கரம் என்னும்
நிதியுடையார் அழகப்பர் நீடூழி வாழியவே.

மார்ச் 1997

91/1

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

ஆசிரியர்:
வி.என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
நடராஜ் அண்ணாமலை

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

குரல் 16
ஒலி 2

தாது
மாசி

மார்ச்
1997

அலுவலகம்:
108–109, நேதாஜி ரோடு,
அறை எண் 12, மாடி
மதுரை – 625 001.

தொலைபேசி: 746206

சொக்கனென் றொருகால் ஓதில் துயர்கெடும் பகையு மாளும்
சொக்கனென் றொருகால் ஓதில் தொலைவிலாச் செல்வ முண்டாம்
சொக்கனென் றொருகால் ஓதில் சுருதிசொல் யாண்டும் செல்லும்
சொக்கனென் றொருகால் ஓதில் சொர்க்கமும் எளிதாம் அன்றே

– பெரும்பற்றப் புலியூர்நம்பி திருவிளையாடல் புராணம்

ஆண்டுச் சந்தா ரூ. 45–00 டெபாசிட் சந்தா ரூ. 300–00

இராமேஸ்வரம் – காசி வழிநடைப் பயணம்

இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு வழிநடைப் பயணமாகச் செல்லும் குழுவினர் (மூன்றாவது குழு) தங்களது நீண்ட வழி நடைப் பயணத்தை 20-02-1997 காலை இராமேஸ்வரத்திலிருந்து துவக்கினர்.

இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்காகவும் உலக மக்களின் நல்வாழ்விற்காகவும் பிரார்த்தனை செய்யும் நோக்கத்தில் முதன் முதலாக 1983 ஆம் ஆண்டில் 'பொற்கிழிக் கவிஞர்' திரு. அரு.சோ. தலைமையில் ஒரு குழுவினர் காசிக்கு வழிநடைப் பயணம் சென்று வந்தனர்.

அடுத்து 1990 ஆம் ஆண்டில் திரு. ஆர். வயிரவன் தலைமையில் ஒரு குழுவினர் சென்று வந்தனர்.

இப்போது மூன்றாவது குழுவினர் 'இசைத் தொண்டர்'. திரு. ந. காசிநாதன் தலைமையில் தமது வழிநடைப் பயணத்தைத் துவக்கியுள்ளனர்.

இக்குழுவில் தேவகோட்டை பள்ளத்தூர், நேமத்தான்பட்டி, தர்மபுரி, பரமக்குடி, சிங்கம்புணரி, ஆகிய ஊர்களைச் சேர்ந்த 22 நபர்கள் அடங்குவர். இக்குழுவினர் தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகிய ஆறு மாநிலங்கள் வழியாக 3,200 கி.மீ. தொலைவு நடந்து விந்திய சாத்பூரா மலைகளையும் பெரிய காடுகளையும் 40 புண்ணிய நதிகளையும் கடந்து 130 நாட்களுக்குப் பிறகு காசி (வாரணாசி) அடைவர்.

இந்த வழிநடைப் பயணத்தின் தொடக்க விழா 20-02-1997 காலை இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோவிலில் நடைபெற்றது. கோவிலூர் ஆதீனம் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற விழாவில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் (அமைப்பாளர்) வரவேற்றுப் பேசினார். நடைப் பயணத்தைத் துவக்கி வைத்து மேற்படி திருக்கோவிலின் நிர்வாக அதிகாரி திரு. பொன். செல்வராஜ், தவத்திரு சிவானந்த சுவாமிகள். இருதயானந்த சுவாமிகள் திரு. சோம. நாராயணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நடைப்பயணக் குழுத் தலைவர் திரு. ந. காசிநாதன் நன்றி கூறினார்.

"மடிகேரி"

கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத்தின் தலைநகராய் உள்ள மடிகேரி முன்பு வெள்ளையர்களினால் 'மெர்க்காரா' (Mercara) என அழைக்கப் பெற்றது. இப்போது இது 'மடிகேரி' என்னும் கன்னடப் பெயராலேயே அழைக்கப்பட்டு அரசுச் சான்றுகள் அனைத்திலும் அவ்வாறே எழுதவும் பெறுகிறது. குடகை ஆண்ட முதுராசகேரி என்ற மன்னன் ஒருவனின் பெயரே இதற்கு இடப்பட்டது; நாளடைவில் இது மருவி மடிகேரி ஆயிற்று. கன்னடத்தில் "கேரி" என்றால் 'ஊர்' என்று பொருளாம். காபி, ஏலக்காய், மிளகு, ஆரஞ்சு முதலிய பயிர்கள் விளையும் குடகுமாவட்டம் ஒரு செழிப்பான பூமியாகும். வீரராஜ் பேட், சோமவார்பேட், மடிக்கேரி என்னும் 3 தாலுக்காக்களைக் கொண்டது இது; இந்திய இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதி திரு. கே.எம். கரியப்பா பிறந்த ஊரும் மடிகேரியாகும். திரு. கரியப்பாவுக்கு மடிகேரியில் மிகக் கம்பீரமான சிலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

– ஏ. வல்லநாட்டான்

நகரத்தார் திருத்தணிப் பாதயாத்திரை

திருத்தணி முருகன் திருவருள் துணை கொண்டு வருகின்ற பங்குனி உத்திரத் திருநாளிற்கு பத்தொன்பதாம் ஆண்டு பாதயாத்திரையாக காவடி முத்திரைகளுடன் பக்தர்கள் சென்னை பவளக்காரத் தெருவிலுள்ள புதுத் தெண்டாயுதபாணி கோவில் வீட்டிலிருந்து தாது ஆண்டு பங்குனித் திங்கள் 6ஆம் நாள் (19–03–1997) புதன்கிழமை காலை 5–00 மணி அளவில் புறப்பட்டுச் செல்கின்றனர். பங்குனித் திங்கள் 10–ஆம் நாள் (23–03–1997) ஞாயிற்றுக் கிழமை பங்குனி உத்திரத்தன்று காலை 9–00 மணியளவில் காவடி பாற்குடங்கள் செலுத்துகின்றனர்.

18–03–1997 பங்குனி 5உ செவ்வாய். பவளக்காரத் தெரு புதுத் தெண்டாயுதபாணி கோவில் வீட்டில் மாலை 6–00 மணிக்கு காவடி கட்டி இரவு சுமார் 9–00 மணி அரகரோகராச் செய்தல்

19–03–1997 பங். 6உ புதன். காலை 5–00 மணிக்குப் புறப்படுதல் – பகல் அம்பத்தூர் தங்குதல். மாலை 5–00 மணிக்கு அம்பத்தூரிலிருந்து புறப்படுதல். இரவு ஆவடியில் தங்குதல்.

20–03–1997 பங். 7உ வியாழன். காலை 6–00 மணிக்கு ஆவடியிலிருந்து புறப்படுதல். பகல் திருநின்றவூர் தங்குதல். மாலை 5–00 மணிக்கு திருநின்றவூரிலிருந்து புறப்படுதல். இரவு திருவள்ளூரில் தங்குதல்.

21–03–1997 பங். 8உ, வெள்ளி. காலை 5–30 மணிக்கு திருவள்ளூரிலிருந்து புறப்படுதல். பகல் திருவாலங்காட்டில் தங்குதல். மாலை 5–00 மணிக்கு திருவாலங்காட்டிலிருந்து புறப்படுதல். இரவு ஸ்டீல் பிளாண்டில் தங்குதல்.

22–03–1997 பங். 9உ சனி. காலை 6–00 மணிக்கு ஸ்டீல் பிளாண்டிலிருந்து புறப்படுதல். – பகல் சரஸ்வதி நகரில் தங்குதல். மாலை 5–00 மணிக்கு சரஸ்வதி நகரிலிருந்து புறப்படுதல். இரவு திருத்தணி சென்றடைதல்.

23–03–1997 பங். 10உ, ஞாயிறு. காலை 9–00 மணியளவில் காவடி முத்திரைகளுடன் பால் குடங்கள் செலுத்தி அபிஷேக ஆராதனை செய்தல். இரவு தங்க ரதம் புறப்பாடு.

நன்றி: நகரத்தார் திருத்தணிப் பாத யாத்திரைக் குழு, சென்னை

கோவிலூரில் கேட்டவை!

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள கம்பத்தடி மண்டபம் 24 முகூர்த்தங்களைக் கொண்டது. குட்டைய சுவாமிகள் மூலம் தேவகோட்டை வயிநாகரம் குடும்பத்தினர் அவற்றைச் செய்ததாக வரலாறு.

தென்னாட்டில் 35,000 கோவில்கள் உள்ளன. அந்தக் காலத்தில் வழிபாடு செய்வதற்காகக் கோவில்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மன்னர்களுக்குப் பிறகு நகரத்தார்கள் கோவில் திருப்பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். கோவில்களைக் காக்க வேண்டியது நமது கடமை. கோவிலூர் திருப்பணி போல் இனிமேல் செய்வதானால் 500 கோடி ரூபாய் ஆகும் என டாக்டர் வை. கணபதி ஸ்தபதி கூறுகிறார்.

- தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்



நகரத்தார்கள் நிர்வாகத்தில் கெட்டிக்காரர்கள். நகரத்தார்கள் இல்லையென்றால் கலைகள் அழிந்து போயிருக்கும். சிற்பக் கலையை ஆதரித்தவர்கள் வரலாறும் சிற்பிகளின் வரலாறும் தேவை.

- வை. கணபதி ஸ்தபதி

செட்டிநாடு என்றால் எங்கும் மதிப்பு. சாமான்ய மனிதர்களுக்கு இந்தக் கோவில்கள் வேண்டும். இப்போது 90 கோடி மக்கள் இருக்கிறார்கள். எனவே மக்கள் பெருக்கத்திற்கேற்ப கோவில்களின் எண்ணிக்கையும் பெருக வேண்டும்.

- எம்.எஸ். கணபதி ஸ்தபதி

நல்ல குணங்களைப் பெற்றவர், தவத்திரு ஆதீனகர்த்தர். தெய்வமே அவரைக் கோவிலூருக்குக் கொண்டு வந்திருக்கிறது.

நகரத்தார்கள் ஈடுபடாத துறையே இல்லை. கோவில் திருப்பணிகளில் மக்கள் மத்தியில் நகரத்தார்களுக்கு நல்ல மரியாதை. நகரத்தார்கள் வக்கீலுக்குப் 'பீஸை'எண்ணி எண்ணிக் கொடுப்பார்கள். ஆனால் கோவில் திருப்பணிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பார்கள்.

- வழக்கறிஞர் பஞ்சாபகேசன்

அரசியலிலே வாரிசுகள் உண்டு; திரை உலகிலே வாரிசுகள் உண்டு; அதுபோல நம் சுவாமிகள் கோவிலூர் ஆண்டவர் என அழைக்கப்பெறும் தவத்திரு முத்துராமலிங்க ஞானதேசிக சுவாமிகளின் 6 ஆவது வாரிசு ஆவார்கள். தகுதி உள்ளவர்கள் வாரிசுகளாக வருவதில் தவறில்லை.

- வி.என். சிதம்பரம் செட்டியார்

கோவிலூர் சுவாமிகள் நல்ல உள்ளத்தோடு, நல்ல சிந்தனையோடு, நிறைந்த செல்வத்தோடு இங்கு வந்திருக்கிறார்கள்.

- முனைவர் சுப. அண்ணாமலை

(கோவிலூரில் 09-02-1997 அன்று நடைபெற்ற கோவிலூர் ஆண்டவர் தேர் வாகனக் கல்லூரி, கோவிலூர் ஆண்டவர் சிற்பக் கல்லூரித் தொடக்க விழாவில்)

ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குப் பாராட்டு விழா

வயிரவன் கோவிலில் வயிரவன் கோவிலைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு 28-01-1997 அன்று மாலை பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

சொக்கலிங்கம்புதூர் திரு. சு.கரு. பழநியப்ப செட்டியார், நச்சாந்துபட்டி திரு. என். சிவனடியான் செட்டியார், ஆத்தங்குடி திரு. ராம.அரு. முத்துக்குமார் செட்டியார் கீழச்சிவல்பட்டி திருமதி மு. பிரேமா ஆச்சி நாட்டரசன்கோட்டை திருமதி ஆர். உமையாள் ஆச்சி காளையார்மங்கலம் திருமதி சரஸ்வதி ஆச்சி ஆகியோர் பாராட்டப் பெற்றனர்.

வயிரவன் கோவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத் தலைவர் திரு. எஸ்.ஆர்எம்.பிஎல். சுப்பிரமணியன் செட்டியார் தலைமையேற்க காசிஸ்ரீ திரு. அரு.சோ., திரு. அ. திருநாவுக்கரசு, கவிஞர் திரு. நா. மீனவன், கவிஞர் திரு. காசு மணியன் ஆகியோர் அவர்களைப் பாராட்டிப் பேசினர். செயலாளர் திரு. ஆர்எம். சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

நகர விடுதி: கட்டிட மேல்மாடித் திறப்பு விழா

காரைக்குடி மேல வடம் போக்கித் தெருவில் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகம் கட்டியுள்ள நகர விடுதியின் திறப்பு விழா 18-01-1991ல் நடைபெற்றது. இப்போது அதன் மேல் மாடியில் பெரிய கூடம் ஒன்றையும் குளியலறை, கழிவறை இணைந்த நான்கு அறைகளையும் பெண்களுக்கென தனியாக ஒரு அறையையும் கட்டி முடித்திருக்கிறார்கள்.

இதன் திறப்பு விழா 09-02-1997 ஞாயிறு மாலை 3-40 மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி மேலாண்மைக் கழகத்தின் தலைவர் திரு. சுப. சண்முகம் செட்டியார் அதனைத் திறந்து வைத்தார்.

முன்னதாக அன்று காலை 7-00 மணிக்கு நகர விடுதியில் உள்ள ஸ்ரீ காசி விநாயகர் கோவிலில் கணபதி ஹோமம் நடைபெற்றது.

திறப்பு விழாவில் புலவர் திரு. அ.நா. மலையாண்டிச் செட்டியார் வரவேற்றுப் பேச காளையார்கோவில் தவத்திரு சிவானந்த சுவாமிகள் ஆசியுரை வழங்க, பேராசிரியர் திரு. நா. சுப்பிரமணியனும் காப்பியக் கவிஞர் திரு. நா. மீனவனும் 'பதிப்புச் செம்மல்' முனைவர் திரு. ச. மெய்யப்பனும் வாழ்த்துரை வழங்கினர்.

மேலாண்மைக் கழகத் தலைவர் திரு. சுப. சண்முகம் செட்டியாரின் 27 ஆண்டுச் சேவையைப் பாராட்டி அவருக்குச் செயலாளர் திரு. சித.நடராஜன் பொன்னாடை அணிவிக்க தவத்திரு சிவானந்த சுவாமிகள் சந்தன மாலை அணிவித்தார்கள்.

நகர விடுதியின் மேல்மாடிக் கட்டிடத்தைச் சிறப்பாகக் கட்டி முடித்த பொறியாளர் திரு. முருகப்பன் விழாவில் கௌரவிக்கப் பெற்றார்.

மேலாண்மைக் கழகத் தலைவரின் தொண்டுகளைப் பாராட்டி அவருக்கு 'காசி அறப்பணி செம்மல்' என்ற பட்டத்தை வழங்க வேண்டுமென்றும் அதற்கு செயற்குழு பொதுக் குழுவில் அனுமதி பெற வேண்டுமென்றும் கூட்டத்தில் பரிந்துரை செய்யப் பெற்றது.

தலைவரின் உரைக்குப் பின் செயலாளர் திரு. சித. நடராஜன் நன்றி கூறினார்.

விழாவில் பொருளாளர் திரு. வி.கேஎன். கண்ணப்பன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நீதியரசர் மெ. சொக்கலிங்கம்

நீதியரசராக இருந்து நம்மினத்திற்குப் பெருமை சேர்ப்பவர்களில் மாண்புமிகு மெ. சொக்கலிங்கம் அவர்களும் ஒருவர்.

திரு. மெ. சொக்கலிங்கம் அவர்கள் சண்முகநாதபுரத்தில் (ஆராவயல்) வங்காளத்தார் வீட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களது தந்தையார் திரு. மெ.நா. மெய்யப்ப செட்டியார். தாயார் திருமதி முத்துக்கருப்பாயி ஆச்சி. இளையாற்றக்குடி பட்டினசாமி வகுப்பைச் சேர்ந்த இவர்கள் 24-03-1950-ல் பிறந்தவர்கள்.

இவர்கள் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் கற்றுத் தேறியவர்கள். அப்போது கல்லூரியின் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பேராசிரியர் திரு. சீனிவாசனின் தங்கப் பதக்கத்தை வென்றவர்கள். கல்லூரியில் பயின்றபோது பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றவர்கள்.

இவர்கள் கல்லூரியில் பயின்ற காலத்தில் முனைவர் திரு. வ.சுப. மாணிக்கனார் முதல்வராக இருந்தார்கள். முனைவர் திரு. அர. சிங்காரவடிவேலன் உட்பட பல தமிழறிஞர்களிடம் மாணவராக இருந்து கல்வி பயின்றார்கள்.

இவர்கள் 1970 முதல் 1973 வரை சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று பி.எல். பட்டம் பெற்றவர்கள்.

1974ல் காரைக்குடியில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கி தேவகோட்டை நீதிமன்றங்களில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்கள். 1982-ல் முகவை மாவட்ட கூடுதல் குற்றத் துறை வழக்கறிஞராகத் தமிழக அரசால் நியமிக்கப் பெற்றார்கள். மேற்படி பணியில் இருந்த போது 23-07-1987ல் தமிழக அரசு இவர்களை மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாக நியமித்தது. (அன்று ஆடி வெள்ளிக்கிழமை)

தமிழ்நாட்டில் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளுக்குக் காலியாக இருந்த 6 இடங்களை நிறைவு செய்யத் தமிழக அரசு விண்ணப்பங்களைக் கோரியது. 420பேர் விண்ணப்பித்தனர். சென்னை உயர்நீதிமன்றத்தைச் சேர்ந்த தலைமை நீதியரசர் உள்ளிட்ட ஐந்து நீதியரசர்கள் குழு



நடத்திய நேர்முகத் தேர்வில் 368 பேர் பங்கேற்றனா. அப்போது மேற்படி குழு இவர்களைத் தேர்வு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்தது. தமிழக அரசு ஆறு மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளை நேரடித் தேர்வு செய்து பணியில் அமர்த்தியபோது இவர்களுக்கு முன்னுரிமை அளித்தது. அது முதல் மூன்றாண்டுக் காலம் திருச்சியில் இவர்கள் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாகவும் 1990 செப்டம்பர் முதல் நான்காண்டுக் காலம் சேலம் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாகவும் பணிசெய்தார்கள். சேலத்தில் அப்பதவி வகித்த போது 1992ல் சேலத்தில் மாவட்டத் தலைமை செஷன்ஸ் நீதிபதியாக நியமனம் பெற்று 1994 ஜூன் வரை பணியாற்றினார்கள்.

1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னை உயர்நீதிமன்றம் இவர்களை

சென்னை மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்தது. இனி இவர்களுக்கு இறையருளால் உயர்நீதிமன்ற நீதிபதி பதவி கிடைக்க வேண்டும்.

நீதியரசர் மாண்புமிகு சொக்கலிங்கம் அவர்கள் தன்னுடைய அய்த்தான் காரைக்குடி திரு. பெரி.வீர. வீரப்ப செட்டியார் அவர்களால் வளர்க்கப் பெற்றவர்கள். நீதியரசர் அவர்கள் காரைக்குடி ஸ்ரீ கொப்புடைய நாயகி அம்மனிடத்திலும் திருச்செந்தூர் ஸ்ரீ செந்திலாண்டவனிடத்திலும் ஆழ்ந்த பக்தியுடையவர்கள். இவர்கள் 1970 ஆம் ஆண்டு முதல் 19 ஆண்டுகள் காரைக்குடியிலிருந்து பழநிக்குத் தொடர்ந்து வழிநடைப் பயணம் மேற்கொண்டார்கள். மாவட்ட செஷன்ஸ் நீதிபதி ஆன பின்பும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பழநிக்கு வழிநடைப் பயணம் சென்று வந்தார்கள்.

இவர்களது திருமணம் 28-11-1982-ல் நடைபெற்றது. இவர்களது துணைவியார் திருமதி முத்துப் பெரியநாயகி ஆச்சி தேவகோட்டையைச் சேர்ந்த சத்திரத்தார் வீட்டில் சத்திரம் சோமசுந்தரம் செட்டியார் அவர்களின் கொள்ளுப் பேத்தி ஆவார்.

எந்தவொரு அரசியல் கட்சியையும் சாராத இவர்கள் சத்தியம், தர்மம், நியாயம் நிலைக்க வேண்டும்; அதற்காகத்தான் நீதிமன்றங்கள் இயங்குகின்றன என்பதில் உறுதியுள்ளவர்கள்.

அரசி வாழ்த்து!

தம் பெற்றோர் தமிழ்நாடு செட்டி நாட்டார்
தவப்பயனால் தன்பெரிய முயற்சி தன்னால்

அம்புவில்வாள் இவற்றாலே கொடுமை செய்யும்
அநியாயக் காரர்களைக் கண்டு சொல்லும்

வம்புநிறை மாவட்ட வழக்கு மன்றில்
வளையாத தீர்ப்பளிக்கும் பதவி வாய்த்த

தம்பியவர் நீதிபதி சொக்கலிங்கம்
தழைத்திடுக உயர்நீதி மன்றம் காண்க

தம்பி சொக்கு என்னிடத்தில் கற்றார் என்று
தமிழாசான் மகிழ்ச்சியுடன் பெருமை கொள்வேன்

எம்பெருமான் முருகனவன் அருளி னாலே
இமயம் போல் உயர்பதவி பலவும் வாய்க்கும்

தம்பியவன் பெயர் சொல்ல அவர்தம் வீட்டில்
தவழ் சிறுவன் மெய்யப்பன் பிறப் பெடுப்பான்

தம்பிக்கு முடியிறக்கச் செந்தூர் செல்வார்
கவியரசி ஆணையிது வாழ்க நன்றே!

– முனைவர். அர.சிங்காரவடிவேலன்

மெர்க்காராவில் நமது சமூகத் தொண்டர்கள்

கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத்திலுள்ள பல்வேறு ஊர்களிலுமாக சுமார் 200 நகரத்தார் குடும்பங்கள் உள்ளன. குடகு மாவட்டத்தின் தலைநகரான மடிகேரியில் நகரத்தார் பெருமக்களுக்கும் செட்டிநாட்டின் பல பகுதிகளிலிருந்து செல்லும் மக்களுக்கும் உற்ற துணையாய் இருந்து உதவி செய்பவர்கள். திரு. நா.இராம.சொ. சிதம்பரம் அவர்கள்; கல்லுப்பட்டியைச் சேர்ந்த இவர்கள் 1966இல் மெர்க்காரா (மடிகேரி) சென்று அங்கு டி.வி.எஸ். புக்கிங் அலுவலகத்தில் பணியாற்றி வருபவர்கள். அவருக்கு தமிழ், ஆங்கிலம். துளுவம், கன்னடம், இந்தி, மலையாளம், கொங்கனி ஆகிய மொழிகள் நன்கு தெரியும். அவரும் மடிகேரி அருகிலுள்ள ஆடிகிரி காபித் தோட்டத்தில் மேலாளராகப் பணியாற்றும் வேந்தன்பட்டியைச் சேர்ந்த திரு. ந. சாத்தப்பன் அவர்களும், நமது நாட்டுக்கோட்டை நகரத்தார் நலனைப் பேணுபவர்கள். நமது "நகரத்தார் குர"லின் பிரதிநிதியாய் அப்பகுதியில் சுற்றுப்பயணம் செய்த திரு. அ. வல்லநாட்டானை வரவேற்று எல்லா உதவிகளும் செய்தவர்கள்.



ந. சாத்தப்பன்

மதுரையில்
மாபெரும் பாத்திரக் கடை

அன்புடன் அழைக்கும்



ஆனந்தா T. அமிர்தம்

தரமான
செட்டிநாடு
சீர்பாத்திரங்கள்
விற்பனை
செய்வதில் தனி
சிறப்பு.

- ⌘ **எவர்சில்வர்**
- ⌘ அலுமினிய பாத்திரங்கள்
- ⌘ பிரஷர் குக்கர்கள்
- ⌘ பிளாஸ்டிக் சாமான்கள்
- ⌘ மிக்ஸிகள்
- ⌘ கிரைண்டர்கள்
- ⌘ பிளாஸ்குகள்
- ⌘ ஹாட்பேக் & மெல்மோவேர்
- ⌘ கேஸ் ஸ்டவ்கள்
- ⌘ திரி ஸ்டவ்கள்
- ⌘ அயர்ன் பாக்ஸ்கள்
- ⌘ Electric Rice Cookers
- ⌘ Non-Stick குக்வேர்கள்
- ⌘ காபி மேக்கர்கள்
- ⌘ சோடா மேக்கர்கள்
- ⌘ எலக்ட்ரிக் கேக் ஓவன்கள்
- ⌘ வாட்டர் பில்டர்கள்
- ⌘ பரிசுப் பொருட்கள்

தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து

மக்களின் நன்மதிப்பை பெற்ற ஸ்தாபனம்

போன் : 620891 & 620576

ஆனந்தா மெட்டல் கம்பெனி பர்ம்

எவர்சில்வர், அலுமினிய பாத்திர வியாபாரம்

43-A & 57, காமராஜர் சாலை, கீழவாசல், மதுரை - 9.



விரையாச்சிலை திரு. முரு.ராம.மு. முத்தையா ராமன் செட்டியார் புதல்வன் முத்தையா M.B.A. (U.K.) க்கும் சண்முகநாதபுரம் திரு. உ.வீர.சேவு.சோம.வீர. நாகப்ப செட்டியார் புதல்வி அலமேலு B.Sc. க்கும் சண்முகநாதபுரம் மணமகள் இல்லத்தில் 19-01-1997 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தில் தொழிலதிபர்கள், நண்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

தலைக் காவேரியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம்

கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத்தில் உள்ள புண்ணிய தீர்த்தமான தலைக்காவேரியில் 1969ஆம் ஆண்டு நிறுவப் பெற்றுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் உள்ளது. தலைக்காவேரித் தீர்த்தத்திற்கு வடக்கே இது அமைக்கப் பெற்றுள்ளது.

"உசிவமயம், நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம், தலைக்காவேரி. சௌமிய வருடம் வைகாசி மாதம் 27ஆம் தேதி 09-06-1969 ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் அவர்களின் நல்லாசியுடன் ஸ்தாபிக்கப் பெற்றது" என்ற தமிழ்க் கல்வெட்டும் மற்றும் கன்னடம், ஆங்கில மொழிகளிலான கல்வெட்டுகளும் அங்கு உள்ளன. இதில் 04-05-83 அன்று ஏற்படுத்தப் பெற்ற கைலாச விநாயகர் கோவிலும் உள்ளது. மேற்படி சத்திரத்தில் பல அறைகளும் பெரிய மண்டபமும் அழகிய முகப்பும் உள்ளன. கோட்டையூர் திரு. ஏ.கே.ஏ.சிடி.ஏஎல். சிதம்பரம் செட்டியார் அவர்களினால் 04-05-1983-இல் கட்டப்பெற்ற தனி மண்டபமும் அங்கு உள்ளது.

தலைக்காவேரிச் சத்திரத்தில் நகரத்தார்கள் தங்கிக் கொள்ளலாம் – விருப்பப்பட்டால் மகமை எழுதலாம்; குடகு மாவட்டத்திலுள்ள நகரத்தார்கள் தங்கள் சமுதாய நிதியைக் கொண்டு இந்தச் சத்திரத்தின் நடப்புச் செலவுகளைச் செய்து வருகிறார்கள். தலைக்காவேரி நகரத்தார் சத்திரத்தை திருச்சி சுவாமிகளின் நல்லாசியுடன் ஏற்படுத்த, காரணகர்த்தாவாக இருந்தவர்கள் 'குடகுக் காந்தி' என்று அன்புடன் அழைக்கப் பெறும் இராயவரம் திரு. சித. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள். சத்திரத்தில் வந்து தங்கும் நகரத்தாருக்கு உணவு வழங்கப்படும் என்றும் முன்கூட்டியே தகவல் கொடுத்தால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அறிந்தோம். சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் கட்டிடம் முதலியவை அமைந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி முதல் நாளன்று (தலை முழுக்கு அன்று) பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு கோட்டையூர் திரு. எம்.ஏ.எல். முத்தையா செட்டியாரும், திரு. எம்.ஏ.எல். அண்ணாமலை செட்டியாரும் (வாழனூர் எஸ்டேட்) அன்னதானம் செய்கிறார்கள்.

சிவன்ராத்திரி அன்றும் அதற்கு முதல்நாள் மாலையும், பல்லி கிட்டி எஸ்டேட் நிருவாகத்தினர் (நகரத்தார் பெருமக்கள்) பனிரெண்டாயிரம் பேருக்கு இந்தச் சத்திரத்தில் அன்னதானம் செய்கின்றனர். குடகு மாவட்டத்திலுள்ள காபித் தோட்டங்கள் அனைத்தும் செழிப்புடன் இருந்து எல்லாருக்கும் வளமும் செல்வமும் மகிழ்வும் வழங்கும்படி வேண்டி ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை மேற்படி சத்திரத்தில் உள்ள கைலாச விநாயகருக்கு அபிசேகங்கள் செய்து அன்னதானங்களையும் குடகு மாவட்ட நகரத்தார் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் நகரத்தார் சார்பில் சொக்கநாதபுரம் திரு. ஆர்.எம். சுப்பையா செட்டியார் அவர்கள் (துபாரி எஸ்டேட்) செய்து வருகிறார்கள்.

மைசூரிலிருந்து 166 கிலோ மீட்டர்கள் தொலைவிலும் பெங்களூரிலிருந்து 292 கிலோ மீட்டர்கள் தொலைவிலும் மடிக்கேரியில் (மெர்க்காரா) இருந்து 42 கிலோ மீட்டர்கள் தொலைவிலும் உள்ளது தலைக்காவேரி

தலைக்காவேரி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தின் முகவரி கீழே தரப்பட்டுள்ளது.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம்

தலைக்காவேரி

பாகமண்டலம் (அஞ்சல்) – 572 247, குடகு மாவட்டம், கர்நாடக மாநிலம்

கட்டுரை: அ. வல்லநாட்டான்

உங்கள் குரல்

நகரத்தார் பெண்கள் சிறப்பிதழ்கள் வெளியிடத் தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சி வெற்றி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

மீனாள் பழநியப்பன்
1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கரன் கோவில்

நகரத்தார் பெண்கள் சிறப்பிதழ் வெளியிடுவது குறித்து மிக்க மகிழ்ச்சி

கண. லெட்சுமி எம்.ஏ.
தலைவர், பேரூராட்சி, கண்டனூர்

நகரத்தார் பெண்கள் சிறப்பிதழ் வெளியிடுவது வரவேற்கத்தக்கது. நம் சமூகத்திலுள்ள பல பெண்களை அறிமுகம் செய்வதால் அவர்களின் அருமை, பெருமைகள், திறமைகள் வெளியுலகத்திற்குத் தெரியவரும். அப்பெருமை தங்களைச் சாரும்.

கலைச்செல்வி இராமநாதன்
திருச்சி

'செவ்வாய்ப் பொங்கல்' கட்டுரை சர்க்கரைப் பொங்கலாக இனிக்கிறது. காலத்திற்கேற்ற அருமையான கட்டுரை. வலம்புரி சோமனாதன் அவர்களின் கடிதம் பல புதிய செய்திகளை வழங்குகிறது. அவரது கருத்துக்கு இடம் அளித்த தங்கள் உள்ளம் உயர்ந்தது.

புலவர் மாமணி முத்துராமன்
பள்ளத்தூர்

வலம்புரி சோமனாதன் அவர்களின் கடிதம் கண்டு, படித்து மகிழ்ந்தேன். அதில் எங்களூர் வித்வான் வெ.பெரி.பழ.மு. காசி விஸ்வநாதன் செட்டியார் அவர்களைப் பற்றிக் குறிப்பிட விடுபட்டு விட்டது. மேற்படி கா. அவர்கள் இராய.சொ., பண்டிதமணி கதி., சொ. முருகப்பா, கம்பன் அடிப்பொடி போன்றவர்களுடன் சேர்ந்து தமிழுக்காகப் பாடுபட்டவர்கள். எங்களூரில் அவர்கள் வழங்கிய ஆயிரக்கணக்கான நூல்களைக் கொண்டு அவர்கள் பெயரால் ஒரு நூல் நிலையம் இயங்கி வருகிறது.

சொ. நாகப்ப செட்டியார்
பாகனேரி

பிப்ரவரி "நகரத்தார் குர"லில் வலம்புரி சோமனாதன் அவர்கள் எழுதிய கடிதம், 'செவ்வாய்ப் பொங்கல்' கட்டுரை, வெற்றிப் படிகள் கட்டுரை போன்றவை சிறப்பாக இருந்தன.

ஏ.என். சிதம்பரம்
விரையாச்சிலை

"நகரத்தார் குர"லின் செய்திகள், கட்டுரைகள், படங்கள், அமைப்பு, அச்சு எல்லாமே நேர்த்தியாக உள்ளன. இதழ் எப்போது வரும் என்ற ஆவலை ஏற்படுத்துகிறது. ஒரு நான்கு மணி நேரம் படிக்கிறார்ப் போல் செய்திகளையும், கட்டுரைகளையும் அதிகமாக்கி மாதம் தோறும் 100 அல்லது 120 பக்கங்களில் வெளியிட்டால் என்ன?

இராம. சிங்காரம்
சென்னை

கந்தன் கவி அமுதம், வெளியீட்டு விழா

தேவகோட்டையில் பெருமாள் வீரப்பன் வீட்டில் "கந்தன் கவி அமுதம்" பழநிப் பாதயாத்திரை சிறப்பு மலர் வெளியீட்டு விழா 12-01-1997 மாலை நடைபெற்றது. அருளாடியார் திரு. பழநியப்ப செட்டியார் தலைமை தாங்கி நூலை வெளியிட்டார். காசிஸ்ரீ திரு. அரு.சோ. முதல் பிரதியினைப் பெற்று வாழ்த்தினார். பேராசிரியர் அருணாசலம், சி.என். நாச்சியப்பன், கவிஞர் மீயன்னா சேவுகன் செட்டி, மாணிக்கம், சிவல்புரி சிங்காரம், பழம்நீ முத்துமாணிக்கம், தமிழருவிமணியன் உரையாற்றினர்.



செய்திகள்

வாசிப்பவர்: எல். சுந்தரம்

★ தமிழக ஊராட்சி மன்றத் தலைவர்களாக மற்றும் பேரூராட்சி, நகராட்சி மன்றத் தலைவர்களாகத் தேர்வு செய்யப் பெற்று பதவி வகித்துவரும் நம்மவர்களுக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக மதுரை நகர விடுதியில் 09-03-1997 ஞாயிறன்று மாலை பாராட்டு விழா நடைபெறவிருக்கிறது. இதில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவரும் திரைப்பட இயக்குநருமான திரு. இராம. நாராயணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கிறார்.

★ காரைக்குடி கம்பன் திருநாள் 22,23, 24-03-1997 ஆகிய மூன்று தினங்கள் காரைக்குடி கம்பன் மணி மண்டபத்திலும் 25-03-1997 அன்று நாட்டரசன் கோட்டை கம்பன் கோவிலிலும் நடைபெற உள்ளன.

★ கோட்டையூரைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. ஏ.கே.ஏ.சிடி.ஏஎல். சிதம்பரம் செட்டியார் - திருமதி உண்ணாமலை ஆச்சியின் 75 ஆவது ஆண்டு திருமண விழா சென்னை ராஜா முத்தையா ஹாலில் 06-02-1997 அன்று சிறப்பாக நடைபெற்றது.

★ வலையபட்டி சிதம்பரம் மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளியின் 21ஆவது ஆண்டு விளையாட்டுப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் 31-01-1997 அன்று மாலை நடைபெற்றன.

★ தஞ்சாவூர் நகரத்தார் சங்கத்தின் சார்பாக 07-02-1997 வெள்ளிக்கிழமை மாலை தஞ்சாவூர் நகர விடுதியில் தவத்திரு புலவர் சொக்கலிங்க சுவாமிகள் முன்னிலையில் திருவிளக்குப் பூஜை சிறப்பாக நடைபெற்றது.

★ திருச்சி கருணாநிதி நகர் ஸ்ரீ கற்பக விநாயகர் நகரத்தார் சங்கத்தின் சார்பாக திருச்சி கே.கே. நகர் தென்றல் நகரில் உள்ள ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவிலில் 21-2-1997 வெள்ளிக் கிழமை மாலை திருவிளக்குப் பூஜை சிறப்பாக நடைபெற்றது.

★ தேவகோட்டை ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம் சார்பாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணப் பரமஹம்ஸரது 162 ஆவது பிறந்த தினம் 17-2-1997 மாலை நடைபெற்றது.

★ கலாமடம் - பாதரக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகளைத் திருப்பணிக் குழுத் தலைவராகக் கொண்டு பாதரக்குடியில் நிறுவப் பெற்றுள்ள அருள்மிகு சந்தோஷிமாதா தேவி ஆலயத்தின் குடநீராட்டு விழா 24-03-1997 திங்கள் காலை மணி 9-00 லிருந்து 9-30 க்குள் நடைபெறவுள்ளது.

★ 'பிரபலமானவர்களின் விலாசங்கள்' என்ற தலைப்பில் மணிமேகலைப் பிரசுரம் ஒரு நூலை வெளியிட்டுள்ளது. கடந்த அக்டோபரில் அதன் 19ஆவது பதிப்பு வெளியாகியிருக்கிறது. அதில் 5,500 முகவரிகள் உள்ளன.

★ பேராசிரியர் முனைவர் திரு. ஆறு. அழகப்பன் எழுதிய "திருமலை நாயக்கர்" நாடகத்தை திரு. ஹெரான் இராமசாமி குழுவினர் 100 முறைக்கும் மேல் மேடையேற்றியுள்ளனர்.

ஆன்மீகச் சுற்றுலா

திருப்பூர் நகரத்தார் சங்கத்தினர் சங்கத் தலைவர் திரு. எம். சம்பந்தம் செட்டியார் தலைமையில் 26 & 27-01-1997 ஆகிய இருநாட்கள் திருவண்ணாமலை, திருப்பதி, அலமேலுமங்காபுரம், திருத்தணி ஆகிய தலங்களுக்கு ஆன்மீகச் சுற்றுலா சென்று நலமாகத் திரும்பினர்.

பிள்ளையார் நோன்பு

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரத்தார் சங்கத்தின் சார்பாக 16-12-1996 அன்று திரு. எம்.பி.எஸ். சுப்பிரமணியன் செட்டியார் வீட்டில் பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. சுமார் 50 பேர் வரை இழையெடுத்துக் கொண்டனர்.

★ ★ ★

திருச்சி கருணாநிதி நகர் ஸ்ரீ கற்பக விநாயகர் நகரத்தார் சங்கத்தின் சார்பாக 16-12-1996 அன்று கருணாநிதி நகர் ஸ்ரீ கற்பக விநாயகர் மேனிலைப் பள்ளியில் பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. சுமார் 110 பேர் இழையெடுத்துக் கொண்டனர். பூஜைப் பொருட்களும், மங்கலப் பொருட்களும் ஏலம் விடப் பெற்றன.

ஆன்மீகச் சோலை

கலாமடம் - பாதரக்குடி ஆதீனத்தில் ஆன்மீகச் சோலையின் 22-ஆம் நிகழ்ச்சி 19-01-1997 அன்று நிகழ்ந்தது. தவத்திரு இரவீந்திர சுவாமிகள் தலைமையேற்று 'ஸ்ரீ ருத்ரம்' பற்றி உரையாற்றினார். காசிஸ்ரீ திரு. அரு.சோ. வரவேற்றார். புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் "வீசு தென்றல்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

கோவிலூரில்,கோலாகல விழா

கோவிலூர் ஆதீனத்தின் சார்பில் 09-02-1997 காலை கோவிலூர் ஆண்டவர் தேர் வாகனக் கல்லூரி, கோவிலூர் ஆண்டவர் சிற்பக் கல்லூரி, ஆகியவற்றின் திறப்பு விழா கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. காசிஸ்ரீ திரு. அரு.சோ. வரவேற்றார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் திரு. வீர. முத்துக்கருப்பன் தேர்வாகனக் கல்லூரியையும் மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் திரு. வை. கணபதி ஸ்தபதி சிற்பக் கல்லூரியையும் தொடங்கி வைத்தனர்.

விழாவில் டாக்டர் திரு. வை. கணபதி ஸ்தபதி, எழுவன்கோட்டை திரு. எம்.எஸ். முத்தையா ஸ்தபதி, துணைவேந்தர்கள் திரு. பி. இராமசாமி, திரு. வீர. முத்துக்கருப்பன், வழக்கறிஞர் திரு. பஞ்சாபகேசன், "கல்கி" திரு. ரா.கி. யின் புதல்வி திருமதி ஆனந்தி இராமச்சந்திரன், திரு. வி.என். சிதம்பரம் செட்டியார், முனைவர் திரு. ச. மெய்யப்பன், முனைவர் திரு. சுப. அண்ணாமலை திரு. ஏ. திருநாவுக்கரசு, திரு. முத்துப் பழநியப்பன், டாக்டர் திரு. எம்.ஆர். முத்தையா, திரு. மு. திருநாவுக்கரசு, திரு. கண. சிற்சபேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முனைவர் திரு. அர. சிங்காரவடிவேலன் வெண்பாவில் வாழ்த்தினார். திரு. முத்தையா நன்றி கூறினார்.

பட்டுச் சேலைக் கடைத் தொடக்க விழா

மதுரை பேலஸ் ரோட்டில் நிறுவப் பெற்றுள்ள 'ஸ்ரீ மீனாட்சி சில்க்ஸ்' என்ற பட்டுச் சேலைக் கடையின் தொடக்க விழா 19-02-1997 காலை 10-30 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. நமது இதழின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரம் புதுக் கணக்கு எழுதித் தொடங்கி வைத்தார். கடையின் உரிமையாளர் திரு. நா.சா. இராமநாதன் அனைவரையும் வரவேற்றார்.


Phone : 621864
623513
Bhagyalakshmi Pattu Maligai A/c.
Sri Bhagyalakshmi Silks A/c.
கல்யாண
பட்டு & மில்
ஜவுளிகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்
பாக்யலக்ஷ்மி பட்டு மாளிகை A/c
ஸ்ரீ பாக்யலக்ஷ்மி சில்க்ஸ் A/c
தெற்காவணி மூலவீதி மற்றும்
வெங்கலக்கடைத் தெரு, மதுரை.

உழைப்பால் உயர்ந்த எஸ்பி. அழகப்பன்

பல்வேறு தொழில்களில் உழைப்பால் உயர்ந்தவர்கள் நம் நகரத்தார் சமூகத்தில் இருக்கிறார்கள். அவர்களில் ஒளிப்படம் எடுக்கும் தொழிலில் இன்று நல்ல நிலையில் இருப்பவர் புதுக்கோட்டையில் 'அழகப்பா ஸ்டுடியோ' வை நிறுவி நடத்திவரும் திரு. எஸ்பி. அழகப்ப செட்டியார் ஆவார்.

திரு. எஸ்பி. அழகப்ப செட்டியாரின் தொடக்க கால வாழ்க்கை. வளர்ச்சி. உயர்வு, அனுபவம் ஆகியவை பற்றி அறிந்து வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் அண்மையில் அவரைப் புதுக்கோட்டையில் சந்தித்து வந்தேன்.

அப்போது அவர் கூறியதாவது:

எங்களூரைச் சேர்ந்த திரு. வெ.மு. முத்தப்ப செட்டியார் அவர்கள் இந்தியன் வங்கியில் இயக்குநராக இருந்தபோது (1954) அவ்வங்கியில் பணியாற்றுவதற்குரிய 'அப்பாயின்மெண்ட் ஆர்ட'ரை என்னிடம் கொண்டு வந்து தந்தார்கள். எனக்கு அதில் விருப்பமில்லை. எனவே அந்த வேலை வேண்டாம் என்று கூறிவிட்டு எனக்கு விருப்பமான புகைப்படம் எடுக்கும் தொழிலைத் தேர்வு செய்தேன். வீடு தேடி வந்த வங்கி வேலையை புறக்கணித்துவிட்டதால் எனது தந்தையாருக்கு என் மேல் கோபம். தொழில் செய்ய என் தாயார் மூலம் பணம் கேட்டேன். என் தந்தையார் எனக்கு ரூ. 900–00 தந்தார்கள். அது என்ன கணக்கு என்கிறீர்களா? எனக்கு முன்பு அவர்கள் வாங்கித் தந்த காமிராவின் விலை ரூ. 100–00 போக பாக்கி பணம்!


ரூ. 900-00 முதலீட்டில் ஸ்டுடியோ

அந்தத் தொகை ரூ. 900–00 ஐ முதலீடாகக் கொண்டு 1955 ல் வாடகைக் கட்டிடத்தில் இங்கு 'அழகப்பா ஸ்டுடியோ'வைத் தொடங்கினேன். இன்று ஓரளவு நல்ல நிலையில் இருந்து வருகிறேன். என்னுடைய வளர்ச்சிக்கு தொழிலில் உள்ள ஆர்வம், நாணயம், நம்பிக்கை, உழைப்பு போன்றவற்றைக் காரணங்களாகச் சொல்லலாம்.

– இவ்வாறு அவர் கூறினார்.



சூரக்குடிக் கோவில் குடநீராட்டு விழாவின்போது (1995) நீதியரசர் மாண்புமிகு ஏ.ஆர். இலட்சுமணன் அவர்களோடு குடநீராட்டு மலர்க் குழுப் பொருளாளர் திரு. எஸ்.பி. அழகப்பன்.



சூரக்குடிக் கோவில் குடநீராட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், மேற்படி கோவிலின் அப்போதைய திருப்பணிக் குழுத் தலைவர், தேனி திரு. உ.ராம. உடையப்ப செட்டியார், திரு. இராம. ஆண்டியப்பன் ஆகியோரோடு திரு. எஸ்பி. அழகப்பன்.

திரு. எஸ்பி. அழகப்ப செட்டியார் புதுவயலில் 28–11–1933 ல் பிறந்தவர். சூரக்குடிக் கோவிலைச் சேர்ந்தவர். இவரது தந்தையார் திரு. வீர.அரு. சுப்பிரமணியன் செட்டியார். தாயார் திருமதி மீனாட்சி ஆச்சி. திரு. அழகப்ப செட்டியார் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் இன்டர் மீடியட் வரை படித்தவர்.

இவர் புதுக்கோட்டையில் தொழில் தொடங்கி 14 ஆண்டுகளுக்குப் பின் பழைய கட்டிடத்தை விலைக்கு வாங்கி அதில் புதிதாகக் கட்டிடம் கட்டி முடித்து 1975 முதல் அதில் தனது 'அழகப்பா கலர் ஸ்டுடியோ'வை நடத்தி வருகிறார்.

இவர் திருச்சியில் பங்குதாரராக இருந்து ஒரு கலர் ஸ்டுடியோவையும் சொந்தமாக ஒரு கலர் ஸ்டுடியோவையும் நடத்தி வந்தார். சில காரணங்களால் அவைகளை நிறுத்தி விட்டார்.

ஆற்றிய தொண்டுகள்

இவர் புதுக்கோட்டை ஜேசீஸ் இயக்கத்தில் 1970 முதல் 1972 வரை செயலாளராக துணைத் தலைவராக, தலைவராக இருந்து தொண்டாற்றியிருக்கிறார்.

புதுக்கோட்டை சுழற் குழுவில் 1973 – 1974ல் செயலாளராகவும் 1974 – 75 ல் துணைத் தலைவராகவும் 1975–76ல் தலைவராகவும் இருந்து நல்ல பல தொண்டுகளைச் செய்து மனம் மகிழச் செய்திருக்கிறார்.

கௌரவ நீதிபதி

இவர் 1970 முதல் 1975 வரை ஐந்து ஆண்டுகள் புதுக்கோட்டையில் குற்றவியல் நீதிமன்றத்தில் கௌரவ நீதிபதியாகச் செயலாற்றியிருக்கிறார்.

சூரக்குடிக் கோவில் குடநீராட்டு விழாவையொட்டி அமைக்கப்பெற்ற குடநீராட்டு மலர்க்குழுவில் இவர் பொருளாளராக இருந்து சேவை செய்துள்ளார்.

சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக் கொண்ட இவர் பெரியார், அண்ணா போன்ற பெரிய தலைவர்களுடன் பழகியிருக்கிறார்.



திரு. எஸ்பி. அழகப்ப செட்டியார், தன் மனைவி திருமதி வள்ளியம்மை ஆச்சியின் 60–ஆம் ஆண்டு நிறைவு விழாவை 16–02–1997 அன்று புதுக்கோட்டை திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் கோவிலில் கொண்டாடிய போது எடுத்த படம். அருகே திரு. அழ. அருணாசலம், திரு. ஆர்.கே. மூர்த்தி, திரு. அழ. சுப்பிரமணியன், திரு. வி.என். சிடி., திரு. பெருமாள் ரெட்டியார் உள்ளனர்.

கவியரசர் கண்ணதாசனோடு மிக நெருங்கிய பழக்கம் கொண்டவர் இவர். கவியரசர் புதுக்கோட்டைப் பக்கம் வந்தால் இவரைச் சந்திக்காமல் சென்றதில்லை.

"ஓவியத்தின் கலைதன்னை ஓர்சிலர்தான் அறிந்திடுவர்
சிற்பத்தின் கலைதன்னை சில்லோர்தான் அறிந்திடுவர்
அற்புதமாம் புகைப்படத்தின் கலைதன்னை அனைவருமே அறிந்திடுவர்"

என கவியரசர் இவருக்கு ஒரு கவிதை எழுதிக் கொடுத்துள்ளார்.

வருகை தந்தவர்கள்

இவரது 'அழகப்பா ஸ்டுடியோ' விற்கு அண்ணா, பாரதிதாசன், கவிஞர் வாணிதாசன் கவிஞர் முடியரசன். தேவநேயப்பாவாணர். கா. அப்பாதுரையார். கி.ஆ.பெ. விசுவநாதம். டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் போன்ற முக்கியமானவர்கள் எல்லாம் வருகை தந்திருக்கிறார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் இன்றைய மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம், நீதியரசர் மாண்புமிகு ஏ.ஆர். லெட்சுமணன், திருச்சி திரு. எல். கண்ணப்பன். 'இலக்கியச் சிந்தனை' திரு. ப. லெட்சுமணன், தேனி திரு. உ.ராம உடையப்ப செட்டியார் முனைவர் திரு. தமிழண்ணல் போன்ற பெருமக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்றவர் இவர்.

குடும்பம்

திரு. எஸ்பி. அழகப்ப செட்டியாரது துணைவியார் திருமதி வள்ளியம்மை ஆச்சி கொத்தமங்கலத்தில் பிறந்தவர். (இவரது தந்தையார் திரு. அரு.அண அருணாசலம் செட்டியார்)

இவர்களுக்கு திரு. சுப்பிரமணியன் திரு. அருணாசலம் என இரு பிள்ளைகளும் திருமதி அழகம்மை என்ற பெண்ணும் உள்ளனர். திரு. சுப்பிரமணியன் B.Sc.. B.L. படித்தவர். வழக்கறிஞர். இவர் காரைக்குடித் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் நகராட்சியின் தலைவருமான திரு. சித. சிதம்பரத்தின் மாப்பிள்ளை. திரு. சுப்புவும் அருணாசலமும் புகைப்படத் தொழில் நிமித்தமாக இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்கள். இவர்கள் இருவரும் தந்தையாருக்குத் துணையாக இருந்து புகைப்படத் தொழிலில் சிறந்து விளங்குகிறார்கள்.

திரு. எஸ்பி. அழகப்ப செட்டியார் தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். தூய வெண்ணிற ஆடைகளையே அணிகிறார். அதுபோல் அவரது உள்ளமும் வெண்மையாக இருக்கிறது.

நாகப்ப செட்டியார்

நமது இதழின் ஆசிரியர் திரு. வி.என். சிதம்பரம் செட்டியாரின் தந்தையார் திரு. நாகப்ப செட்டியார் புதுக்கோட்டையில் வசித்தபோது (1958) அவ்வப்போது தன் ஸ்டுடியோவிற்கு வருவார்கள் என்றும் தானும் அவர்கள் வீட்டிற்குச் சென்று வந்ததாகவும் அவர்களை தந்தையார் ஸ்தானத்தில் வைத்து நடத்தியதாகவும் கூறுகிறார். திரு. வி.என்.சிடி. அவர்கள் உயர்நிலைப் பள்ளி முதல் கல்லூரி வரை தன் வகுப்புத் தோழர் என்றும் தன் குடும்ப நண்பர் என்றும் அவர்கள் வரவேற்பாளராக இருக்க புதுவயலில் தனது மணி விழா 26–11–1993 ல் சிறப்பாக நடைபெற்றது என்றும் கூறுகிறார்.

கலர் ஃபோட்டோ ஸ்டுடியோத் தொழில் இப்போது போட்டி மிகுந்த தொழிலாகப் போய்விட்டது என்றும் தனக்குக் கறுப்பு – வெள்ளைப் படங்களே மிகவும் பிடித்தவை என்றும் அவைகள் நீண்டகாலத்திற்கு இருப்பதே அதற்குக் காரணம் என்றும் தெரிவித்தார்.

இவருடைய குடும்பமே கலையுணர்வு மிக்க குடும்பம். இவருடைய தம்பி திரு. சத்தியமூர்த்தி திருச்சியில் 'சக்தி ஆட்டோ கலர் லேப்' ஐத் தொடங்கி நடத்தி வருகிறார். திரு. எஸ்பி. அழகப்ப செட்டியார் சொந்த முயற்சியால், உழைப்பால் முன்னுக்கு வந்தவர்.

சந்திப்பு: எல். சுந்தரம்

'நகரத்தார் குரல்' வாசகர்களுக்கு. . .

"நகரத்தார் குரல்" இதழ் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 6 அல்லது 7 ஆம் தேதி அஞ்சலில் சேர்க்கப் பெறுகிறது.

சந்தாத் தொகையை 'நகரத்தார் குரல்' என்ற பெயரில் பாங்க் டிராப்ட் மூலம் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பலாம். நேரில் ரொக்கமாகவும் செலுத்தலாம். சந்தாத் தொகைக்கு செக் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மணியார்டர் மூலம் பணம் அனுப்புபவர்கள் தனிப்பட்ட பெயர்களுக்கு அனுப்பாமல் "நகரத்தார் குரல்" என்ற பெயரில் அலுவலக முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். பலர் மணியார்டர் கூப்பனில் முகவரியை எழுதாமல் அனுப்புகின்றனர். அதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே முகவரியை முழுமையாக எழுதுவதுடன் தங்களுக்கு எந்த மாதம் முதல் இதழ் வேண்டும் என்பதை மறவாமல் குறிப்பிட வேண்டுகிறோம்.

- நிர்வாகி


அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்
தரமான தங்க நகை மாளிகை
கோல்டன் ஜுவல் பாரடைஸ்
வெல்லுங்கள்
ரூ 1,00,000/-
ஒரு லட்சம்
மாதம் ரூ.500/- வீதம்
45 மாதம் மட்டுமே!
• பிரதி மாதம் ரூ. 25,000/-க்கு தங்க நகைகள் பரிசு.
• பம்பர் பரிசு ரூ. 1,00,000/- ஒரு லட்சம்.
• முடிவில் போனஸ் 2500/-.
• டிபன் கேரியர் அல்லது சூட்கேஸ் ஆரம்ப அன்பளிப்பு.
இன்றே சேருவீர்
அதிர்ஷ்ட தேவதை திட்டம்
கோல்டன் காமதேனு திட்டம்
• ரூ. 1,00,000/- ஒரு லட்சம் பெற மாதம் 500 X 12 மாதம் மட்டுமே
• பம்பர் பரிசு 1 லட்சம்
தரமான வைரம், தங்கம், வெள்ளி, முத்து ஆபரணங்கள் வாங்க சிறந்த நிறுவனம்
கோல்டன் ஜுவல் பாரடைஸ் A/C
182, தெற்குமாசி வீதி, மதுரை - 1. ☎ 36415
Fax : 0452-36415 Pager : 9698-150381
கிளைகள் : சென்னை, கோவை, திருச்சி, சேலம்

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

புலவர் திரு. இராம. இராமநாதன்



சீர் சிறப்பாய் ஊர் போற்ற வாழ்ந்திட்ட
சிகரச் சித்திரமே உதிராத காவியமே
நல்ல பண்புடனே நல்லொழுக்கம் சிறந்துயர
தமிழ் கல்வி பலருக்கு தரமுடனே தந்த வள்ளலே
பாரோர் புகழும் பண்புடைய மாணிக்கமே
மறைந்த இந்நாளில் உமை நினைத்து வணங்குகிறோம்

தோற்றம்:
30-4-1939

மறைவு:
18-2-1996

இங்ஙனம்
RM. இராமசாமி
RM. மீனாட்சி
K. அழகப்பன்
K. உடையம்மை
P. கண்ணன்
K. இராமநாதன்

வி.என்.சிடி. உதிர்த்த நல் முத்துக்கள் !

★ ஈட்டல், காத்தல், வகுத்தல் என்பது நகரத்தார் பண்பு. அந்த வழியில் இப்போது தவத்திரு சுவாமிகள் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

★ கோவிலூர் எங்கு இருக்கிறது என்று கேட்டால் அது காரைக்குடிக்குப் பக்கத்தில் என்று சொல்கிற நிலை இன்று இருக்கிறது. காரைக்குடி எங்கு இருக்கிறது என்று கேட்டால் அது கோவிலூருக்குப் பக்கத்தில் என்று சொல்லும் காலத்தை தவத்திரு சுவாமிகள் ஏற்படுத்தவிருக்கிறார்கள்.

★ சொத்து, பணம் இருக்கிற வீட்டிற்கு பிள்ளை செல்வது வழக்கம். ஆனால் தவத்திரு சுவாமிகள் கோடி கோடியாக பணத்தோடு கோவிலூருக்கு வந்து காரியமாற்றுகிறார்கள்.

(கோவிலூரில் 09–02–1997 அன்று நடைபெற்ற கோவிலூர் ஆண்டவர் தேர்வாகனக் கல்லூரி, கோவிலூர் ஆண்டவர் சிற்பக் கல்லூரி தொடக்க விழாவில் நமது இதழின் ஆசிரியர் திரு. வி.என். சிதம்பரம் செட்டியார் உரையாற்றியதிலிருந்து. . . .)

மடிகேரி ஓம்காரேசுவரர் திருக்கோவில்

கர்நாடக மாநிலம் குடகு மாவட்டம் மடிகேரி நகரின் நடுவில் உள்ளது மடிகேரி ஓம் காரேசுவரர் திருக்கோவில்; குடகு அரசருக்கும் திப்பு சுல்தானுக்கும் 9 முறை போர் ஏற்பட்டு அதில் ஒரு முடிவும் ஆகாமல் இரு அரசர்களுக்குமிடையில் மனமாற்றம் ஏற்பட்டு சமரசம் உருவாகியது. இதனைக் குறிக்கும் முறையில் இந்து இசுலாமிய முறையில் இக்கோவிலை குடகு அரசர் அமைத்திருக்கிறார். கோபுரங்கள் மசூதியிலுள்ள அமைப்பைப் போன்றும் மற்றும் 4 மூலைகளிலும் நந்திகளும் வைத்து இக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. ஓர் சிறிய கோட்டையில் அமைக்கப் பெற்றுள்ள இக்கோவிலில் சுப்பிரமணியர், கணபதி ஓம்காரேசுவரர் எழுந்தருளியுள்ளனர். காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட சிவலிங்கம் இங்கு நிறுவப்பட்டுள்ளது. மெர்க்காரா செல்வோர் இதனை அவசியம் காண வேண்டும்.

திருமணம்

கண்டவராயன்பட்டி திரு. நா.சி.சொ. சொக்கலிங்கம் செட்டியார் பேத்தியும் திரு. செந்தில்நாதன் புதல்வியுமான மீனாட்சிக்கும் சண்முகநாதபுரம் திரு. அ.யெ..அரு.மு.அரு. இராமநாதன் செட்டியார் பேரனும் அருணாசலம் செட்டியார் புதல்வனுமான இராமநாதனுக்கும் கண்டவராயன்பட்டி மணமகள் இல்லத்தில் 19-01-1997 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

★ ★ ★

கல்லல் திரு. வயி.நா.வயி. வயிரவன் செட்டியார் பேரனும் டாக்டர் திரு. வயி. வயிரவன் செட்டியார் புதல்வனுமான பாலசுப்பிரமணியன் B.Arch. (Hons) M. Arch (U.S.A.) க்கும் நாட்டரசன்கோட்டை டாக்டர் திரு. பழ.வீர.கண.ச.கண. மோகன் செட்டியார் புதல்வி லதா (B.Sc.) க்கும் நாட்டரசன்கோட்டை மணமகள் இல்லத்தில் 23-01-1997 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தை ஒட்டி வாழ்த்தரங்கம் நடைபெற்றது.

★ ★ ★

ஒக்கூர் திரு. கரு.சொ. இராமநாதன் செட்டியார் புதல்வி உமையாள் என்ற உமா மகேஸ்வரிக்கும் ஆத்தங்குடி திரு. சு.லெ.அழ. சுப்பிரமணியன் செட்டியார் பேரனும் திரு. அழகப்ப செட்டியார் புதல்வனுமான சுப்பிரமணியனுக்கும் 22-01-1997 அன்று ஒக்கூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

★ ★ ★

பலவான்குடிப் புலவர் திரு.வெ.வெ.வெ. வேலப்ப செட்டியார் புதல்வி முத்தாத்தாளுக்கும் கண்டனூர் திரு. வெ.பழ. பழநியப்ப செட்டியார் புதல்வன் லெட்சுமணனுக்கும் காரைக்குடியில் 10-02-1997 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.


59-ஆம் ஆண்டு நிறைவு விழா

பாகனேரி திரு. மு.நா. முத்துநாராயணன் செட்டியார் - திருமதி கண்ணாத்தாள் ஆச்சியின் 59 ஆம் ஆண்டு நிறைவு விழா 04-02-1997 அன்று பாகனேரி புதுவளவில் சிறப்பாக நடைபெற்றது.

வயிரவன் கோவிலில் சகஸ்ர கலசாபிஷேகம்

வயிரவன் கோவிலில் வருஷாபிஷேகத்தை ஒட்டி 28-01-1997 செவ்வாய் மாலையும் 29-01-1997 புதன் காலையும் யாகசாலைப் பூஜைகள் நடைபெற்றன. 29-01-97 காலை கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் முன்னிலையில் சகஸ்ரகலசாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது.

"150 ஆண்டுகளாக பலகோடி மக்கள் சென்னையில், நம்பி வாங்கும் ஆசியாவின் மிகப்பெரிய கடிகார ஷோரூமின் கிளை :"




கைக்கேற்ற கடிகாரம் தேர்ந்தெடுக்க ஒரு சிறந்த இடம்

பி.ஆர் & சன்ஸ்

- தேர்ந்தெடுக்க பல இந்திய, வெளிநாட்டு பிராண்டுகள்
- இந்தியாவின் பிரபல "டைட்டன்" வாட்ச்சுகள்
- தேர்ந்தெடுக்க 2000-க்கும் அதிகமான மாடல்கள்
- தயாரிப்பாளர்களின் சிபாரிசு விலைகளில் விற்பனை
- 2,500 சதுர அடி பரந்த ஷோரூம், முழுவதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டது
- ஸ்விஸ் வாட்ச்சுகளும் கிடைக்கும்
- சர்வதேச தரமுடைய, உத்திரவாதமான ஸர்வீஸ்
- சுவர்க் கடிகாரங்கள், அலாரம் டைம்பீஸ்களும் கிடைக்கும்

காலை 9.30 முதல்
இரவு 9.00 மணி
வரை



P.ORR & SONS

(ஸ்தாபிதம் : 1849)
90, அம்மன் சன்னதி தெரு,
மதுரை-625 001.
போன் : 622498

TITAN • TIMEX • hmt • ACCURATE • WESTAR

நகரத்தார் பெண்கள் சிறப்பிதழ்!

"நகரத்தார் குர"லின் ஏப்ரல், மே மற்றும் ஜூன் '97 ஆகிய மூன்று இதழ்களும் நகரத்தார் பெண்கள் சிறப்பிதழ்களாக வெளிவர இருக்கின்றன.

நாங்கள் நகரத்தார் பெண்களில் பலதரப்பட்டவர்களுக்கு தனித்தனியாக சுமார் 75 கடிதங்களை அனுப்பி அவர்களைப் பற்றிய விவரங்களையும் அவர்களது படங்களையும் அனுப்பி வைக்குமாறு கேட்டிருக்கிறோம். இதுவரை 20 பேர் பதில் எழுதியிருப்பதுடன் தங்களைப் பற்றிய விவரங்களையும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்களது நன்றி. மற்றவர்களும் கடிதம் கிடைக்கப் பெறாதவர்களும் தங்களைப் பற்றி எழுதி அனுப்பி, அவற்றை நாங்கள் வெளியிட்டால் நகரத்தார் பெண்களின் திறமை, பெருமை சிறப்புக்கள் நம்மினத்தவர்களுக்கு மட்டுமல்லாது நாட்டு மக்களுக்கும் தெரிய வரும்.

எனவே இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அனைத்து நகரத்தார் மாணவிகளையும், பெண்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

– ஆசிரியர்

பழைய புத்தகங்கள் தேவை

நகரத்தார் இல்லங்களில் 60, 70 ஆண்டுகளுக்கு முன்னர் பதிப்பிக்கப்பெற்ற பழந்தமிழ்க் கவிதைகள், பிரபந்தங்கள் பல பயனின்றி பரண் மீது இருக்கக் கூடும். அத்தகைய புத்தகங்களை நாங்கள் விலை கொடுத்துப் பெற்றுக் கொள்கிறோம்.

விபரங்கட்குத் தொடர்பு கொள்க!

பெட்டி எண்: 250

C/o, "நகரத்தார் குரல்"

108–109 நேதாஜி ரோடு, மதுரை – 625 001

அறிவிப்பு

"நகரத்தார் குரல்" இதழின் 39 ஆவது ஆலோசனைக் குழு உறுப்பினராக தேவகோட்டை திரு. அழ.அரு.சோம. நாராயணன் செட்டியார் அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர்

துலாவூரில் பாவை விழா

துலாவூர் ஆதீனத்தில் 01–01–1997 காலை ஆதீன முதல்வர் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. காசிஸ்ரீ திரு. அரு.சோ. துணைவியார் நீலாயதாட்சி, பேரன் அருணாசலம், தேவகோட்டை மா. மீனாட்சி ஆச்சி ஆகியோர் காரைக்குடியிலிருந்து பாற்குடம் தாங்கிவந்து செலுத்தினர். பின்னர் துலாவூர் ஆதீனகர்த்தர் தலைமையில் பாவை விழா சிறப்பாக நடைபெற்றது. காசிஸ்ரீ திரு. அரு.சோ. வரவேற்றார். திரு. ஏஎல்.எஸ். தியாகராசன் செட்டியார் தொடக்கவுரை ஆற்றினார். திருவாளர்கள் சோம. நாராயணன் செட்டியார், முனைவர் சபா. அருணாசலம், முனைவர் கரு. முத்தையா, புலவர் முத்துசண்முகம், புலவர் மெய்யாண்டவர், கவிஞர் உலகநாதன், கவிஞர் கனவுதாசன், ரெங்கசாமி, சொக்கலிங்கம் மற்றும் பலர் உரையாற்றினார்.

விளையாட்டு விழா

காரைக்குடி கம்பன் கற்பகம் மேல்நிலைப் பள்ளியின் 25–ஆம் ஆண்டு விளையாட்டு விழா 11–01–1997 மாலை சிறப்பாக நடைபெற்றது. அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் திரு.பி. இராமசாமி தலைமை தாங்கினார். திரு. மு.மெ. முத்துராமன் செட்டியார் பொன்னாடை போர்த்தினார். காசிஸ்ரீ திரு. அரு.சோ. சிறப்புரையாற்றினார். திரு. பி.ஆர். சொக்கலிங்கம் பரிசுகள் வழங்கினார்.

பழநி நகரத்தார் சங்கம்


பழநி நகரத்தார் சங்கத்தின் 12 ஆம் ஆண்டு விழா 23 & 24–01–1997 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றன. முதல் நாள் திரு. பழ. பழநியப்பன் வரவேற்றார். திரு. ஏ. நாகப்பன் அறிக்கை வாசித்தார். முனைவர் திருமதி சரஸ்வதி இராமநாதன் உரையாற்றினார். திரு. எஸ்டி. பிஎல். சுப்பையா நன்றி கூறினார்.

இரண்டாம் நாள் கவியரங்கிற்கு முனைவர் திரு. அர. சிங்காரவடிவேலன் தலைமையேற்றார். கவிஞர்கள் திரு. சொ.சொ.மீ. சுந்தரம் திரு. அரு.சோ. திரு. அரசி. பழநியப்பன், திருமதி கண்ணம்மை அரங்கநாதன் கவிதை பாடினர். திரு. பி.ஆர். கேஎம். பெரியகருப்பன் நன்றி கூறினார்.

மண்டலாபிஷேக விழா

கண்டவராயன்பட்டி ஸ்ரீ தண்டாயுத பாணி கோவில் மண்டலாபிஷேக விழா குடநீராட்டு மலர் வெளியீட்டு விழா ஆகியவை 27–01–1997 காலை காளையார் கோவில் ஆதீனகர்த்தர் தவத்திரு சிவானந்த சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. தவத்திரு சுவாமிகள் மலரை வெளியிட காசிஸ்ரீ திரு. அரு.சோ. அதனைப் பெற்றுக் கொண்டு வாழ்த்திப் பேசினார். திரு. அரு.சோ. குடநீராட்டு பற்றி எழுதியுள்ள தாலாட்டுப் பாடலும் வெளியிடப் பெற்றது. மலர்ப் பதிப்பாசிரியர் புலவர் திரு. நாக. சண்முகம் பாராட்டப் பெற்றார். திரு. கே.வி. ஆர்எம். கருப்பையா செட்டியார் திரு. அ. வல்லநாட்டான் புலவர் திரு. முத்து சண்முகம் பாராட்டிப் பேசினார். திரு. சொக்கலிங்கம் வரவேற்க திரு. குமரப்பன் நன்றி கூறினார்.

வருந்துகிறோம்



தோற்றம்
8-9-1914

மறைவு
29-1-1997

கோனாபட்டு (செய்கோன்)

சுப.சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள்

29-01-1997 புதன்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாருடைய ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

தேவி எலெக்ட்ரிக்கல்ஸ் போன்: 31343
போன்: 30955

விக்னேஷ் ஏஜென்சி போன்: 31104

செந்தில் டிரேடர்ஸ்

தேவி ஃபைனான்சியர்ஸ் இல்லம் - 22429

ஸ்ரீநிவாஸ் கேப்ஸ் போன்: 20360

தஞ்சாவூர்

கோனாபட்டு போன்: (04365) 81239

NOTICE

Form IV
(See Rule 8)

Statement of ownership and other particulars about "NAGARATHAR KURAL" Monthly, Madurai.

1.	Place of Publication	:	108-109, Nethaji Road Madurai - 625 001
2.	Periodicity of its Publication	:	Monthly
3.	Printer's Name	:	A. Palaniappan
	Nationality	:	Indian
	Address	:	Expo Printers 20, Krishnapuram 4th Cross Street. Madurai - 625 009.
4.	Name of Editor	:	V.N. Chidambaram
	Nationality	:	Indian
	Address	:	21, Kamala 2nd Street Chinna Chokkikulam Madurai - 625 002.
5.	Name and Address of Publisher & Owner	:	Nadrajh Annamalai Plot No. 377 Anna Nagar Madurai - 625 020

1, Nadrajh Annamalai hereley declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 28-02-1997

(Sd) Nadrajh Annamalai
(Publisher)

1997ஆம் ஆண்டின் முக்கிய விரத நாட்கள்

மாதம்	அமாவாசை	பௌர்ணமி	கார்த்திகை	சஷ்டி	சங்கடகர சதுர்த்தி	பிரதோஷம்	மாத சிவராத்திரி
ஜனவரி	8	23	18	14	27	6, 21	7
பிப்ரவரி	7	22	14	12	26	5, 19	5
மார்ச்	8	23	14	14	27	6, 21	7
ஏப்ரல்	6,7	22	10	13	26	5, 20	5
மே	6	22	7	12	25	4, 19	5
ஜூன்	4	20	4	11	23	2, 18	3
ஜூலை	4	19	1,28	10	23	2, 17,31	3
ஆகஸ்ட்	2	18	25	9	21	16, 30	1,31
செப்டம்பர்	1	16	21	8	19	14, 29	29
அக்டோபர்	1,30,31	15	18	7	19	13,28	29
நவம்பர்	29	14	14	6	17	12, 27	28
டிசம்பர்	29	13	12	5	17	11, 27	27

பங்குனி உத்திரத்தன்று அன்னதானம்

பங்குனி 11–ஆம் நாள் (24–03–1997) திங்கட்கிழமை பங்குனி உத்திர நாளன்று திருப்பரங்குன்றம் நகர விடுதியில் உள்ள மரகத விநாயகருக்கு அபிஷேக ஆராதனை நடைபெறுமென்றும் அன்று பகல் 12 மணியளவில் அன்னதானம் வழங்கப் பெறுமென்றும் சுமார் 13 ஆண்டுகளாக இந்த நல்ல காரியத்தைச் செய்துவரும் மேலைச்சிவபுரியைச் சேர்ந்தவரும் மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைவருமான திரு. அ.சுப. அண்ணாமலை அறிவித்திருக்கிறார். விழாவில் அனைவரும் கலந்து கொள்ளும்படியாக கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

சிவகங்கை சங்கம்: நிர்வாகிகள் தேர்வு

சிவகங்கை வாழ் நகரத்தார்கள் கூடி சிவகங்கை நகரத்தார் சங்கத்திற்கு திரு. லெ. சொக்கலிங்கம் செட்டியாரைத் தலைவராகவும் திரு. கா. இராமநாதன் செட்டியாரைத் துணைத் தலைவராகவும் திரு. இராம. சுப்பிரமணியனை செயலாளராகவும் திரு. கண. சண்முகத்தை துணைச் செயலாளராகவும் திரு. கரு. ஆதப்பனை பொருளாளராகவும் தேர்வு செய்திருக்கிறார்கள். இவர்கள் 01–01–1997 முதல் இரண்டு ஆண்டுகள் பதவி வகிப்பார்கள்.

இயற்கை எய்தினார்

ஆ. தெக்கூரைச் சேர்ந்த திருமதி ஆறு.வி. மங்கை ஆச்சி தனது 78 ஆவது வயதில் 08–01–1997 அன்று சேலத்தில் இயற்கை எய்தினார். கிரிகைகள் ஆ. தெக்கூரில் நடைபெற்றன.

செய்தி

சென்னை பவளக்காரத் தெருவில் உள்ள நகர விடுதிகளிலிருந்து அருள்மிகு தெண்டாயுதபாணி சுவாமி 18–02–1997 செவ்வாய்க் கிழமையன்று திருவொற்றியூருக்கு எழுந்தருளியது. 19,20 மற்றும் 21–02–1997 ஆகிய மூன்று தினங்களும் திருவொற்றியூரில் மகேசுவர பூஜை நடைபெற்றது.

சிந்தனைக்குச் சில !

வலுத்தவர் எவரும் மிரட்டத்தான் செய்வார்கள்!

மாமியாரும் ஒரு வீட்டு மருமகள் தான்!

உருட்டல் மிரட்டலுக்கு சத்தியம் என்றும் அஞ்சியதில்லை!

எப்போதும் வேலை செய்து கொண்டிருந்தால் தீய எண்ணம் வராது!

விவேகமற்ற வீரம் முரட்டுத்தனமாகும்!

- ஹால்ஸ் நாராயணன்
கண்டவராயன்பட்டி

உங்களுக்குத் தெரியுமா ?

உலகில் அதிக மக்கள் வாழும் நகர் டோக்கியோ

முதல் முதலில் கிரிக்கெட்டை இங்கிலாந்து தொடங்கியது.

இத்தாலி நாட்டுக் கணிதமேதை கலிலியோ

உலகின் கூடை என அழைக்கப்படும் இடம் திபெத்

மைக்கா அதிகம் கிடைக்கும் நாடு பாரதநாடாகும்

சைக்கிளைக் கண்டுபிடித்தவர் கே. மாக்மில்லன் என்பவர்

முன்னோர்களை நினைத்து ஆடி மாதம் வழிபட்டால் சிறப்படைவீர்கள்!

- ஹால்ஸ் நாராயணன்
கண்டவராயன்பட்டி

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணாபுரம் 4–வது குறுக்குத் தெரு, மதுரை – 625 009ல் அச்சிட்டு நடராஜ் அண்ணாமலை அவர்களால் 108–109, நேதாஜி ரோடு, மதுரை – 625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது.
ஆசிரியர்: வி.என். சிதம்பரம்


தரமான
ரெடிமேட் ஆடைகள்
ரெயின்போ
81, அம்மன் சன்னதி மதுரை
PHONE : 622225

Regd. No. TN/MA/(C)/106
Licence to post without prepayment